**ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட் - 2016**

---

ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட் (''கம்பனி''), கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் (''தொகுதி'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்த கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் துறையிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்றின் மூலம் நான் உதவியைப் பெற்றிருந்தேன். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

பறக்கும் சாம்பல் (fly Ash) மற்றும் கீழ்சாம்பலினைப் (bottom slag) பயன்படுத்தி சீமந்து அடிப்படையிலான பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனைக்கு இலங்கையில் கூட்டு முயற்சியொன்றினை ஸ்தாபிப்பதற்கு 2012 யூலை 27 இல் Amtrad Holdings (Private) Limited உடன் கூட்டு உடன்படிக்கையொன்றை தொகுதி ஏற்படுத்தியிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொகுதியினால் ரூபா 7,364,447 முதலீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 மார்ச் 27 இல் உடன்படிக்கையினை இரத்துச்செய்வதற்கு சபை தீர்மானித்திருந்தது. இது தொடர்பில் ஏற்பட்ட கிரயங்களின் மீள் அறவிடுகை தொடர்பான போதுமான பொருத்தமான சான்றுகளினைப் பெற்றுக்கொள்வதற்கு எமக்கு முடியாது காணப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட முதலீடு தொடர்பில் இனங்காணப்படவேண்டிய ஏதேனும் நட்டக்கழிவு தொடர்பான தேவைகள் காணப்படுகின்றதா என்பதனை எம்மால் தீர்மானிக்கமுடியாதிருந்தது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் சாதகமான தாக்கங்களைத் தவிர்த்து, தொகுதியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் சாத்தியமான தாக்கங்களினைத் தவிர, கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பதும், மற்றும்

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் எச்ஆர் (பிறைவேட்) லிமிட்டட்டின் செலுத்தவேண்டிய வீஏரீ மீதி ரூபா 28,682,944 காணப்பட்ட போதிம், உள்ளபடியான செலுத்த வேண்டிய வீஏரீ மீதி ரூபா 16,904,819 மாத்திரம் காணப்பட்டது. காரணம், வீஏரீ விகிதங்களில் மாற்றங்கள் நிகழ்ந்ததன் காரணமாக கம்பனி ரூபா 11,791,191 வீஏரீ இனை ஏற்கனவே அதிகப்படியாக சேகரித்திருந்தது. எவ்வாறாயினும், ரூபா 16,904,819 இல் ரூபா 1,000,000 இனை மாத்திரம் கம்பனி செலுத்தியிருந்ததுடன், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்திற்கு முரணாக ரூபா 15,904,819 மீதி 2018 செப்தெம்பர் 30 வரையிலும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

**3. நிதிசார் மீளாய்வு**

---

**3.1 நிதிசார் விளைவு**

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் தொழிற்பாடுகளினை தொடர்புடைய முன்னைய ஆண்டிற்கான ரூபா 27,315,567 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 93,216,780 வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றை விளைவித்திருந்தமையினால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 65,901,213 முன்னேற்றமொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. துணைக்கம்பனிகளின் மொத்த இலாபம் ரூபா 86,856,448 இனால் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

---

**4.1 செயலாற்றல்**

---

**4.1.1 திட்டமிடல்**

---

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியினால் கூட்டிணைந்த திட்டமொன்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.1.2 செயற்பாடும் மீளாய்வும்**

---

(அ) ஒளிபரப்பு வரிசைகள் மற்றும் மின்சார விநியோக உப நிலையங்களின் நிர்மாண வியாபாரங்கள், புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி செயற்திட்டங்களினை நிர்மாணித்தல், பராமரித்தல் மற்றும் செயற்படுத்தல் மற்றும் மின்சார எரிசக்தி உற்பத்திக்காக தேவைப்படும் வேலைகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் அபிவிருத்திக்கு அவசியமாக காணப்படுகின்ற செயற்பாடுகளில் ஈடுபடல் மற்றும் இலங்கை மின்சார சபையின் சேவைகளுக்கான மனிதசக்தியின் ஆட்சேர்ப்பு மற்றும் விநியோகம் என்பவற்றில் ஈடுபடுவதற்காக கம்பனி 2011 சனவரி 09 இல் கூட்டிணைக்கப்பட்டிருந்தது.

2016 ஆம் ஆண்டின் இறுதியில் கம்பனி அதன் துணைக்கம்பனி உரிமையைக் கொண்டிருக்கும் கும்பலாகமுவ மினி ஹைரோ (பிறைவேட்) லிமிட்டட்டின் மூலம் சமனலவெவயில் சிறிய நீர் மின்சக்தி பொறியொன்றை நிர்மாணித்து வெற்றிகரமாக

செயற்படுத்தியிருந்தது. மேலும், மற்றுமொரு நீர் மின்சக்தி பொறியினை நிர்மாணிப்பதற்கு தெதுருஓயா மினி ஹைட்ரோ (பிறைவேட்) லிமிட்டட் எனும் பெயரினையுடைய மற்றுமொரு துணைக் கம்பனியுடன் அது கூட்டிணைக்கப்பட்டது. ஆண்டின்போது கம்பின மீட்டர் (Meter) பலகைகளினை உற்பத்தி செய்வதற்கான புதிய செயற்திட்டமொன்றில் ஈடுபட்டிருந்தது. எவ்வாறாயினும், அதன் வியாபார செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஸ்ரீலங்கா என்ர்ஜீஸ் எச்ஆர் (பிறைவேட்) லிமிட்டட்டின் பிரதான செயற்பாடாக இலங்கை மின்சார சபையின் சேவைகளுக்கு ஆட்சேர்ப்புக்களினை மேற்கொள்வதும் மனிதசக்தியினை விநியோகிப்பதுமாகக் காணப்படுகின்றது. கம்பனியில் ஏறத்தாழ 2,800 மனிதசக்தியினர் பணியாற்றுகின்றதுடன் 2016 ஒக்தோபர் இறுதியளவில் இலங்கை மின்சார சபைக்கு பெரும்பாலும் அனைத்து ஊழியர்களும் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 2018 ஆகஸ்ட் இன் இறுதியில் கம்பனியில் 11 ஊழியர்கள் மாத்திரம் தொடர்ந்தும் காணப்படுகின்றனர். எவ்வாறாயினும், ஏதேனும் எழுத்துமூலம் பெறப்பட்ட ஒப்புக்கொள்ளுதல் அல்லது இலங்கை மின்சார சபைக்கு உள்ளீர்க்கப்பட்ட மனிதசக்தியின் பட்டியலொன்று எமது வேண்டுகோளிற்கிணங்க சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியங்களின் மெய்மையாய்வினை நடாத்துவதற்கு வருடாந்த அளவைச் சபைகள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுமதிசேர் வரியின் செலுத்துகைக்கு வரையப்பட்ட இந்த காசோலை வேண்டப்படும் கையொப்பங்களினை கொண்டிருக்காமை காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்ததன் காரணமாக, அபராதமொன்றாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் ரூபா 1,040,692 தொகையொன்று அறவிடப்பட்டிருந்தது.

## 4.3 மனிதவளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையாக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தினைக் (எஸ்ஓர்ஆர்) கொண்டிராது பதவியணியினர் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பந்தி (ஆ) இன் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது கம்பனியினால் ஏழு ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

Amtrad ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட், துணிகர முயற்சியுடன் பறக்கும் சாம்பல் (fly ash) மற்றும் கீழ்சாம்பலினைப் (bottom slag) பயன்படுத்தி சீமந்து அடிப்படையிலான பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனைக்காக தொழிற்சாலையொன்றை நிர்மாணிப்பதற்கு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொகுதி ரூபா 7,364,447 முதலீடு செய்திருந்தது. எவ்வாறாயினும், சந்தைப்படுத்தலுக்கான முறைமையொன்று காணப்படாமை காரணமாக கூட்டு முயற்சி உடன்படிக்கை நிறுத்தப்பட்டிருந்தது. விலைமதிப்பு திணைக்களத்தின் விலைமதிப்பு அறிக்கையின் பிரகாரம், 2016 யூன் 30 இல் உள்ளபடியான ஆதனத்தின் மதிப்பீடு ரூபா 3,200,000 ஆகக் காணப்பட்டதுடன் குறித்த சொத்து 2014 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்று தொடர்ந்தும் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், கம்பனி பணிப்பாளர் சபை இலங்கை மின்சார சபைக்கு சொத்துக்களினை கையளிப்பதற்கு

தீர்மானித்திருந்ததுடன் 2016 நவம்பர் 10 இல் பொது முகாமையாளர்க்கு எழுத்துமூலமான வேண்டுகோளொன்றை மேற்கொண்டனர். இருப்பினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் இலங்கை மின்சார சபையினால் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 வருடாந்த அறிக்கை

தொடக்கத்திலிருந்து கம்பனியினால் வருடாந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக கம்பனியினால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் மின்சக்தி மற்றும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்கதி அமைச்சு ம்றும் இலங்கை மின்சார சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவுகளினால்கூட 2016 இல் எவ்வித கணக்காய்வும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.4 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம், கணக்காய்வுக் குழு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் தொடர்ச்சியான அடிப்படையில் சந்தித்தல் வேண்டும். எவ்வாறாயினும், கணக்காய்வுக் குழுக்கள் கம்பனியினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கு கம்பனியினால் வருடாந்த பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் அல்லது ஏதேனும் சாத்தியமான பிழைகள் மற்றும் ஏற்படக்கூடிய முறைமையீனங்களை கண்டுபிடிப்பதற்கும் தடுப்பதற்கும் இடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளினை காட்டுகின்ற எழுதப்பட்ட நடைமுறைக் கையேடு கிடைக்கக்கூடியதாக காணப்படவில்லை.